# தொழில் அமைச்சு

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

NIOSH
National Institute of Occupational Safety and Health • Sri Lanka

## பதவி வெற்றிடங்கள்

தொழில் அமைச்சுடன் இணைந்த மற்றும் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. தொழில்சார் பாதுகாப்பு அலுவலர் (தரம் II) : பதவிகள் 01

1.1 நியமனத்தின் தன்மை

i. சேவை வகை : கனிஷ்ட முகாமையாளர்

ii. சம்பளக் குறியீடு : JM 1 -1-2016 A

iii. சம்பள அளவுத்திட்டம் :ரூ. 42,600 – 10x755 – 18x 1,135 – 70,580 (மு.சே.சுற்றறிக்கை 02/2016 இன்படி)

**1.1 பதவிக்கு ஒதுக்கப்படும் கடமைகள்**

(i) சேவை நிலையங்களில் தொழில்சார் சுகாதாரத்தின் அளவைக் கண்காணிப்பதற்காக புலனாய்வு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.

(ii) தொழில்சார் பாதுகாப்புப் பிரிவின் ஆய்வுகூட நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவம், மேற்பார்வை, ஆய்வுகூட உபகரணங்களுக்கான பராமரிப்பு பற்றிய நேரடிப் பொறுப்பு

(iii) சேவை நிலையங்களில் தொழில்சார் சுகாதாரத்தின் அளவைப் பேணிவருவதற்காக தொடர்ச்சியான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அந்த இடங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

(iv) சேவை நிலையங்களில் காணப்படுகின்ற பாதகமான காரணிகளை மதிப்பிடுவதற்காக பணியிடச் சூழலை அளவிடுதல், ஆய்வுகூடத்திலுள்ள உபகரணங்கள் மற்றும் களத்தில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்ட உபகரணங்களின் பராமரிப்பு.

(v) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) அலுவலர்கள் துறைக்குரியதாக நிறைவேற்றும் தொழில்சார் பாதுகாப்பு பற்றிய தொழில்நுட்ப கடமை நடவடிக்கைகள், வேலைகளை ஒப்படைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(vi) மேல்மட்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

1.3 **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்** :

1.3.1 **கல்வித் தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வித் தகைமைகள்**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் உள்ளிட்ட விஞ்ஞானமாணி (இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில்) பட்டம் பெற்றிருத்தல் அல்லது இரசாயனவியல் பாடத்தில் சிறப்புப் பட்டம் (இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவில்) பெற்றிருத்தல்.

மற்றும்

ii. பட்டம் பெற்றதன் பின்னர் அரச அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் துறைக்குரியதாக ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

1.3.2 **மேலதிக தகைமைகள்**

ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல்.

1.3.3 **வயதெல்லை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.34. **ஏனையவை**

**சகல விண்ணப்பதாரிகளும்,**

(i) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்காகவும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

1.4. **ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

## 02. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) : பதவிகள் 02

2.1. நியமனத்தின் தன்மை

| | | | |
|---|---|---|---|
| i. | சேவை வகை | : | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) |
| ii. | சம்பளக் குறியீடு | : | MA 1 -1-2016 Grade III |
| iii. | சம்பள அளவுத்திட்டம் | : | ரூ.27,910-10x300-7x350-4 x495-20 x660-48,540 |

2.2. **பதவிக்கு ஒதுக்கப்படும் கடமைகள்** :

(i) நிறுவகத்தில் பல்வேறுபட்ட பாடநெறிகளை ஆரம்பித்து பேணிச் செல்வதற்கு உதவியளித்தல்.

(ii) பல்வேறுபட்ட கருத்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தல்

(iii) பல்வேறுபட்ட கருத்திட்டங்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் தயாரித்தல்.

(iv) நிறுவகத்தின் விடுமுறை அறிக்கைகள், நிர்வாக அறிக்கைகள், வருடாந்த அறிக்கைகள் உட்பட அறிக்கைகள்சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் நிருவாக அலுவலர்களின் உதவியுடன் தயாரிப்பதற்கு உதவியளித்தல்.

(v) நிறுவகத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு உதவியளித்தல்.

(vi) மேல்மட்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்

2.3 **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்** :

2.3.1 **கல்வித் தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

**கல்வித் தகைமைகள்**

i. கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

ii. கல்விப் பொதுத்தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது 03 பாடங்களில் சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர்ந்ததாக சித்தியடைந்திருத்தல்.

2.3.2 **உள்வாரி விண்ணப்பதாரிகள்** :

ஆரம்பத் தரம் - தொழில் நுட்பம் சார்ந்த சேவை வகைகளுக்குரிய பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஊழியர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

i. கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

ii. சேவையில் நிரந்தர பதவி வகிக்க வேண்டுமென்பதோடு அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குறித்த தினத்திற்கு முன்னதாக நிரந்தர நியமனமொன்றில் ஆகக் குறைந்தது 05 வருட இடையறாத சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2.3.3 **வயதெல்லை**

: விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2.34. **ஏனையவை** :

**சகல விண்ணப்பதாரிகளும்,**

(i) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்காகவும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2.4. **ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

இந்த நியமனங்கள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி உரித்துடையதுமாகும்.

**ஆட்சேர்ப்பின் போதான சம்பளம் :**

வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு மத்தியிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படும்போது குறிப்பிட்ட நபர் சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப படிநிலையில் அமர்த்தப்படுதல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்போது அவர்கள் அமர்த்தப்பட வேண்டிய சம்பள படிநிலை தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை :**
**நீங்கள் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தை 2022.04.13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், இலக்கம் 97, ஜாவத்தை வீதி, கொழும்பு 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பீர்களாயின் தலா ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் என்ற வகையில் விண்ணப்பங்களை தனித் தனியாக அனுப்புதல் வேண்டும்.**

**விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியின் பெயர்** குறிப்பிடப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதி :**

பதவி நியமனத்திற்காக விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமாகிய 2022.04.13 ஆம் திகதியில் சகல வகையிலும் பூரணப்படுத்தியிருக்கும் பட்சத்தில் மட்டுமே அவர் மேற்படி தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கருதப்படுவார்.

மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் பற்றிய இறுதித் தீர்மானம் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்குரியதாகும்.


பணிப்பாளர் நாயகம்
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
இலக்கம் 97
ஜாவத்தை வீதி
கொழும்பு 05.

தொலைபேசி இலக்கம்:- 011- 2585425 / 011 – 598672
மின்னஞ்சல் :- info@niosh.gov.lk
வலைதளம் :- www.niosh.gov.lk